විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS
ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය  தலைமுறையொன்றின் பெருமிதம்  Pride of a Generation

මගේ අංකය / எனது இல. / My No. } ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதஇல : 09/2019

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................

දිනය / திகதி / Date } 2019.06. 17

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,

அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,

அனைத்து திணைக்களத் தலைவர்கள்,

முப்படைத் தளபதிகள்,

அனைத்து மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள்,

உள்ளூராட்சி நிறுவனங்களின் நிறுவனத் தலைவர்கள்,

**PD 03 இயங்கலை விண்ணப்பத்தைத் திருத்துதல்.**

ஓய்வு பெற்ற அலுவலகரின் முழுமையான சேவைக் காலத்திற்குமான விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான பங்களிப்புக்கான சான்றளிப்பை வழங்குதற்கான ஒரு மாதிரியை உட்புகுத்தி , 2019.06.12 ஆம் திகதி தொடக்கம் PD 03 இயங்கலை விண்ணப்பம் திருத்தப்பட்டது.

2. ஆகையால், 2019.06.12 ஆம் திகதியில் இருந்து இயங்கலையினூடாக இவ் உட்புகுத்தப்பட்ட தகவல்கள் அடங்கிய PD 03 விண்ணப்பத்தினை அச்சுப் பிரதியெடுக்கும் போது மேற்குறிப்பிடப்பட்ட இவ் உட்புகுத்திய மாதிரி உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டியது கட்டாயமானது என்பது தங்களுக்கு தயவுடன் அறியத்தரப்படுகிறது. அவ்வாறு மேற் குறிப்பிட்ட மாதிரியை கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படும்.

3. அதற்கமைய, கூறப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதிய செயல்படுத்தும் நேர்காணலுக்கு வருகை தரும் போது மேற்குறித்த பங்களிப்பு மீட்டெடுப்பு தொடர்பில் நிறுவனத்தின் தலைவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்க் கடிதத்தை சமர்ப்பிக்கத் தேவையில்லை.

4. மேலும், PD 03 இயங்கலை விண்ணப்பத்தினை அச்சுப் பிரதியெடுக்கையில் பெறப்பட்ட அறிவுறுத்தல்க் காகிதத்தை ஓய்வூதியரிடம் வழங்காது ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அச்சுப் பிரதியுடன் அனுப்பும் நடவடிக்கையும் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, ஓய்வூதியத்தைச் செயல்படுத்தும் நேர்காணலுக்கு வருகை தந்த ஓய்வூதியர்கள், நேர்காணலுக்கு தேவையான ஆவணங்கள் இல்லாததால் மற்றொரு திகதி வழங்கப்பட்டு திருப்பி அனுப்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகையால் இதன் காரணமாக ஓய்வூதியர்களிற்கும் அலுவலர்களுக்கும் ஏற்படும் சிரமங்களின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. மேலும், **ஓய்வூதியர்களுக்கு இந்த அறிவுறுத்தல் கடிதத்தை கட்டாயமாக வழங்க தங்களது விடய அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு தங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.**

**ஒப்பம்**
**ஏ. ஜகத் டி டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk

Annex 01

# Recovery of Contributions towards Widows'/Widowers' and Orphans' Pension Scheme

## Declaration of Subject Officer

Name of the retiring officer - ……………………………………………………………………..

NIC - ……………………………………………………………………...

W & OP No. - ……………………………………………………………………...

I hereby certify that the contributions towards the Widows'/Widowers' and Orphans' Pensions Scheme were **fully recovered** for the **whole service period** of the above retiring officer according to all the information provided by the above retiring officer/other government institutions/ personal file of the retiring officer.

Date - ……………….

……………………………..
Signature

## Declaration of the Accountant of Institution

I hereby certify that the contributions towards Widows'/Widowers' and Orphans' Pension Scheme were **fully recovered** for the **whole service period** of the above officer.

| Official Stamp | Signature |
|---|---|

Date - ………………..